உ

காஞ்சீபுர மஹாக்ஷேத்திரத்தில் உள்ள

சிவலிங்கங்கள்

தொகுப்பு :

ஸ்ரீ ராஜப்பா குருக்கள்.

முன்னுரை

முக்திபுரியில் முக்தி அளிக்கும் திவ்ய ஆலயங்கள் நூற்றுக்கணக்காயும் முக்தி அளிக்கும் திருவுரு கொண்டு அருள்பாலிக்கும் தெய்வ ஸ்வரூபங்கள் கணக்கில் அடங்காத நிலையில் உள்ள இப்புவியில் ப்ருதிவி அம்சமாக ஸ்ரீ காஞ்சி என்ற மோக்ஷபுரியில் உள்ள அற்புத தத்வங்கள் கணக்கில் அடங்காதது. நமது மதத்தின் ரக்ஷகமாக விளங்கும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் இப்புவிக்கு மேரு பர்வதம் போன்று விளங்கி மதரக்ஷணம் செய்து வருகின்றது. இந்த பீடத்திற்கு காரணபூதர்களான ஆதி சங்கர பகவத் பாதர்கள் தன் மனதின் ஸம்மதப்படி ஷண்மதத்தையும் ரக்ஷிக்கின்ற இந்த புண்ய க்ஷேத்திரத்தில் ஒரு உன்னத நிலையை பக்தர்களுக்கு உணர்த்தும்,

சில க்ஷேத்ரங்களில் க்ஷேத்திர நாயகனான ஒரு தெய்வத்தையே குறிக்கும் க்ஷேத்திரங்கள் பல உள்ளன. ஆனால் மோக்ஷபுரியான ஸ்ரீ காஞ்சியில் எல்லா தெய்வங்களும் ப்ரதானமாக விளங்குகின்றன. திகட சக்ர விநாயகரும், குமரகோட்ட பெருமானும், ஏகாம்பரேஸ்வரரும் காமாக்ஷி அம்மையும், வரதராஜ பெருமாளும் ஆங்காங்கு சூர்யமூர்த்தியையும் உபாஸிக்கும் முறையையும் தெரிவிக்கும் சிவ காஞ்சி, விஷ்ணு காஞ்சி என்ற பெயருடன் விளங்கும் இந்த திவ்ய க்ஷேத்திரத்தில் எத்தனை ஆலயங்கள் உள்ளன? எந்த மஹான்களால் பூஜிக்கப்பட்டன? என்ன பலன் பெற்றன? அந்த ஆலயங்கள் எங்குள்ளன? என்ற விபரங்களுக்கு பேருதவியாக இந்த அரும்பெரும் நூல் வெளிவருவது ஆஸ்திக அன்பர்களுக்கு பெரும் பாக்யமாக இருக்கின்றன, ஸ்ரீ காமகோடி பீடத்தின் ஈஸ்வராளான ஸ்ரீ பெரியவாள் ஆக்ஞைப்படி கட்டப்பட்ட 22 புண்ய ஆலயங்களும், இன்னும் கட்டவேண்டிய 16 சிவமூர்த்தங்களும் உள்ளன. இந்த திவ்ய மூர்த்திகளை தரிசனம் செய்து வழிபாடு செய்து எல்லோரும் இகபர க்ஷேமத்தை அடையும்படி ஸ்ரீ ஜெகத் குருவின் கருணாரஸ பூரிதமான ஆக்ஞையின்படி வெளிவரும் இந்த அரும்பெரும் புண்ணிய நூல், ஆஸ்திக பெருக்களுக்கு பேருதவி புரியும் என்று நான் மிகவும் நம்புகிறேன்.

இத்தகைய பேருதவி செய்கின்ற இந்த புஸ்தகத்தை வெளிவர உதவி செய்தவர்களான திரு. V. ராஜப்பா குருக்கள் அவர்களுக்கும், திரு. கோகுலா அவர்களுக்கும் எனது நன்றியுடன் வாழ்த்துக்களைத் கூறுகிறேன்.

மஞ்சக்குடி
K. ராஜகோபால சாஸ்திரிகள்



ஓம் ஸ்ரீ குருப்யோ நம: ।
ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம: ॥

ஸ்வஸ்தி வாசனம்

ஸ்வஸ்தி—ஸ்ரீமத் அகில பூமண்டலாலங்கார,
த்ரயஸ்த்ரிம சத்கோடி—தேவதா ஸேவித,
ஸ்ரீ காமாக்ஷீ தேவீஸநாத—ஸ்ரீமத் ஏகாம்பரநாத—
ஸ்ரீ மஹாதேவீ ஸநாத—ஸ்ரீ ஹஸ்த கிரிநாத—
ஸாக்ஷாத்கார—பரமாதிஷ்டான
ஸத்யவ்ரத நாமாங்கித—காஞ்சி திவ்யக்ஷேத்ரே—
சாரதா மட ஸுஸ்திதாநாம்—அதுலித ஸுதாரஸமா
மாதுர்ய—கமலாஸன—காமினீ தம்மில்ல
ஸம்புல்ல—மல்லிகா—மாலிகா—நிஷ்யந்த
மகரந்த-ஜரீஸௌவஸ்திக—வாங்நிகும்ப
விஜ்ரும்பணானந்த—துந்திலித மநீஷிமண்ட
லாநாம்—அனவரத அத்வைத, வித்யாவிநோத
ரஸிகாநாம்—நிரந்தராலங்க்ருதீ க்ருத—
சாந்தி தாந்தி பூம்நாம்—ஸகலபுவனசக்ர
ப்ரதிஷ்டாபக—ஸ்ரீசக்ரபிரதிஷ்டாவிக்யாத
யசோலங்க்ருதாநாம்—நிகிலபாஷண்ட
ஷண்டகண்ட கோத் தாடனேன—
விசதீக்ருத வேத வேதாந்த மார்க—
ஷண்மத ப்ரதிஷ்டாபகா சார்யாணாம்—
ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ரா ஜகாசார்யவர்ய—
ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத் பாதாசார்யாணாம்—
இதானீம்தன ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிப—
ஸ்ரீமத் சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீநாம்—
ஸ்ரீமத் ஜயேந்த்ர ஸரஸ்வதீநாம்—
சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதீநாம்ச—திவ்ய
சரணார விந்தேஷு—ஸவிநயம்—
ஸப்ரச்ரயம்—ஸாஞ்சலி பந்தம் ச
அனந்த கோடி ப்ரணாமானி ஸமர்ப்பயாம: ॥



ஸ்ரீ விகடசக்ர விநாயகர்

ஸ்ரீ காமாக்ஷியம்பாள் சமேத ஸ்ரீ ஏகாம்பர நாதர் ஸ்வாமி ஆலயத்தினுள் ஐந்தாம் பிரகாரத்தில் (ஆயிரங்கால் மண்டபத்தில்) உள்ளவர்.

இவர் விஷ்வக்ஸேனனது விகடக் கூத்தைக் கண்டு திருமாலுக்கு சக்ரதானம் செய்தவர்.

ஸ்ரீ திருக்கச்சிமயானம்

திருநாவுக்கரசர் பாடல்

ஸ்ரீ ஏகாம்பரநாதர்

திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசு ஸ்வாமிகள்
சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்
பாடல்

தீர்த்தம் சிவகங்கை
ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்தினுள் கொடிக்கம்பத்தை அடுத்து தென் கிழக்கில் உள்ளவர்.

மேற்கு பார்த்த சன்னதி

தீர்த்தம், கம்பாநதி
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் மணல் லிங்கம் பிடித்து வழிபடப்பட்டது.

கிழக்கு பார்த்த சன்னதி

ஸ்தலவிருக்ஷம் மாமரம்
4 வேதங்கள் 4 கிளைகளாகவும் ஈஸ்வரனே மாமர ருபமாகவும் விளங்குகின்றார்.

பண்டாசுர ஸம்ஹார ஸ்தலம், இதை திருநாவுக்கரசர் "மைப்படிந்த கண்ணாளும் நானும் கச்சிமயானந்தான் என்று தேவாரத்தில் வைத்தும் பாடியுள்ளார். இது பஞ்சலிங்கங்களுள் ஒன்று.

ஸ்ரீ காமாக்ஷி அம்மையாரால் கம்பா நதியில் மணல் லிங்கம் பிடித்து வழிபடப்பட்டது. அம்மையாருடைய வளைத்தழும்பும் தனத்தழும்பும் பெற்ற காரணத்தால் இவருக்கு "தழுவக் குழைந்த நாதர்" என்ற பெயரும் உண்டு.

தீண்டாத் திருமேனி. இவருக்கு தேவாரத் திருப்பதிகங்கள் பன்னிரண்டும், திருவாசகத்துள் சில பாடல்களும் உள்ளன. இவரைப் பூஜிக்காத தேவர்களும், ரிஷிகளும், முனிவர்களும் இல்லை. மாவடியில் எழுந்தருளியிருக்கின்ற காரணத்தால், "ஏகாம்பரநாதர்" என்ற திருப்பெயருடன் எழுந்தருளி இருக்கின்றார்.

திருஓணகாந்தன் தளி

ஓணேஸ்வரர்
காந்தேஸ்வரர்
சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பாடல்
ஜலந்தரேஸ்வரர்

இத்தலம், பஞ்சுப் பேட்டைக்கு மேற்கில் உள்ளது. (சர்வதீர்த்தத்திற்கு வடக்கில் உள்ளது)
தீர்த்தம், ஒணன், காந்தன் இவர்களால் உண்டாக்கப் பட்டது.

வாணசுரனுடைய சேனபதிகள் ஓணன், காந்தன் என்ற இருவரால் வழிபடப் பட்டது. தனித்தனியே இரண்டு சன்னதிகள் உள்ளன. காந்தேஸ்வரர் சன்னதியில் ஓங்காரவினயகர் தரிசிக்கத் தக்கது.

இக்கோவிலுக்குள் ஜலந்தராசுரன் வழி பட்ட ஜலந்தரேச திருக்கோயில்அமைந் துள்ளது.

கச்சி அனேக தங்காவதம்
(அனேக பேச்சுரன்)
சுந்தரமூர்த்தி நாயனர் திருப்பதிகம்

கிழக்கு பார்த்த சன்னதி

புத்தேரித் தெருவிற்கு மேற்கில், கைலாச நாதர் ஆலயத்திற்கு அருகில் உள்ளது.

யானைமுகமுடைய விநாயகர் தம்பெய ரால் (அனேகயம்-யானை) அநேக பேச்சுரன் எனப் பெயர்பெறும் சிவ லிங்கம் நிறுவிப் போற்றப் பெருமான் வெளிநின்றனர். "யாதுபணி" என வணங்கி வேண்டிய விநாயகர்க்குப் பெருமான் அருள் செய்த தலம்.

திருமேற்றளி

(திருஞான சம்பந்தர்பாடல்)

1. பச்சமேஸ்வரர்
2. ஒத்தீஸ்வரர்

மேற்கு நோக்கிய சன்னதி

பிள்ளையார் பாளையம் சாலைத் தெருவில் உள்ள திருஞான சம்பந்தர் கோவிலுக்கு மேற்கில் திருமேற்றளித் தெருவில் உள்ளது.

திருஞான சம்பந்தர் கோவிலுக்கு அண்மையில் உள்ள ஈஸ்வரர் "சம்பந்தர் பாடலை ஒற்று கேட்டவர் என வழங்கப்படுகிறார்.

(1) திருமால் சிவசாரூபம் பெற விரும்பித் தவம் செய்தனர். சிவபெருமான் அவருக்கு காட்சி அளித்து "நீ விரும்பிய நமது சாருபப் பேற்றை, வைவஸ்வத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாங் கலி யுகத்தில் சீகாழிப் பதியில் தோன்றும் நமது அடியவனாகிய திருஞான சம்பந்தன் அளிப்பான். அதுகாறும் நீ இங்கே இருந்து தவம்புரிக என்று அருளிச் செய்து மறைந்தனர். திருமால் அங்ஙனமேதவஞ்செய்திருந்து திருஞான சம்பந்தப்பெருமான் அங்கு எழுந்தருளி வந்து, தமது அருட்பாடலால் சிவசா ரூபம் தரப்பெற்றனர்.

2. ஒதபுரீஸ்வரரை ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானாக திருப்பதிகத்தாற் பாடும் பொழுது அப்பதிகத்தை தாமும் கேட்க வேண்டுமென்றும் ஆசையினால் வந்த சிவபெருமான். ஒற்று கேட்ட முக்தீஸ் வரர்.

திரு நெறி காரைக்காடு

ஸ்ரீ திருக்காளீஸ்வரர்

(அல்லது)

ஸ்ரீ சத்யவிரதேஸ்வரர்

திருஞான சம்பந்தர் பாடல்

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்

மேற்கு நோக்கிய சன்னதி

திருக்காலிமேடு

சிவி என்னும் இந்திரன் இருவினை ஒப்பும் மலபரிபாகமும் சத்திநி பாதமும் கைவரப்பெற்றுப் போகங்களை உண்டு மிழ்ந்த சோற்றினும் அருவருத்து வியாழ பகவானின் செவியறிவுறுப்பெற்று முன்னர் இந்திர பதவியை வழங்கிய அக்காரைக் காட்டீசரை வணங்கி முக்தி சேரும் கணநாதர் தம் தலைவன் ஆயினன்.

இந்திரன் வழிபட்டமையால் இந்திர புரம் எனவும், காரை மரங்களின் சூழ லால் காரைக்காடு எனவும் பெறும் அத்தலம். புதன் வழிபட்டு கிரகநிலை பெற்றமையின் புதன்கிழமை இந்திர தீர்த்தத்தில் மூழ்கிக் காரைக் காட்டீசரை வணங்குதல் சிறப்புடையது.

வெள்ளக்கம்பர் கள்ளக்கம்பர் நல்லகம்பர்	ஏகாம்பரநாதர் கோவில் முதல் பிராகாரத்தில் ஏகாம்பர நாதருக்கு வலப்பக்கம் வெள்ளக்கம்பர் இடப்பக்கம் கள்ளக்கம்பர் ஈசானத்தில் நல்லகம்பர்	சிவபெருமான் கச்சி மயானத்தின் கண் சைவ வேள்வி செய்து முடித்தபின்னர் சிவ சக்தி லலிதாதேவி என்னும் திருநாமம் கொண்டு வெளிப்பட்டு யாவும் படைக்கத் தொடங்கியபொழுது அவரது முக்கண்ணிலும் தோன்றிய மும்மூர்த்திகளுள் பிரமனால் பூஜிக்கப்பட்டவர் வெள்ளக்கம்பர் திருமாலால் பூஜிக்கப்பட்டவர் கள்ளக்கம்பர் ருத்திரரால் பூஜிக்கப்பட்டவர் நல்ல கம்பர்.
அகஸ்தீஸ்வரர்	ஸ்ரீ ஏகாம்பர நாதர் கோவிலுள் முதல் பிரகாரத்தில் தென்பாகத்தில்	விந்திய மலையின் இறுமாப்பை அடக்க தேவர்கள் வேண்டியவாறு காசியில் வசித்திருந்த அகஸ்திய முனிவர் காஞ்சிக்கு வந்தபோது அக்காஞ்சி சான்றோரையுடைத்தாய்இருக்கும் சிறப்பை நாடி இவ்விடத்தில் நாம் தேவர்கள் சொல்லியவண்ணம் வெளிப்படுத்தவெண்ணியிருக்கும் இனிமையுடையதாகிய தமிழை வெளியாக்கல் வேண்டும் என்று பூஜித்தனர்.

அஷ்டோத்ரசதலிங்கம் (108)	ஸ்ரீ ஏகாம்பர நாதர் ஆலயத்தினுள் முதல் பிராகாரத்தின் மேற்கு பாகத்தில்	உமாதேவியார் பத்ரிகாச்ரமத்தில் சிவாக்ஞையால் யோகதண்டம் முதலியவைகளோடு சிவார்ச்சனைக்காகத் தாம் பெற்றுவந்த மணல் காஞ்சிக்கு வந்தபோது லிங்கரூபமானவைகள்.
மார்கண்டேஸ்வரர்	முதல்பிராகாரத்தில் வடக்கு பக்கத்தில்	மார்கண்டேய முனிவர் ஓர் காலத்தில் ஜலப்பிரளயம் வந்தபோது அதில் நீந்திவந்து ஓர் புகலிடம் காணாது மனம் வருந்திப் பார்க்க காஞ்சியிலுள்ள வேதஸ்வரூபமாகிய மா விருக்ஷம் வளர்ந்து ஜலப்பிரளயத்தின் மேல் தோன்றியது அதுகண்டு அதனைப் பிடித்துக்கொண்டு காஞ்சியிலிருந்து ஆரம்பமாகிய யாவையும் ஆம்ரநாதரையும் கண்டு களித்துப்பின்னர் தமது பெயரால் பூஜித்தனர்.

மத்தளமாதவேஸ்வரர்	ஸ்ரீ ஏகாம்பரநாதர் கோவினுள் முதல் பிராகாரத்தில் வடக்கு பக்கத்தில்	மாதவராகிய திருமால் தில்லையில் திருநடனங் கண்ட காலத்தில் நந்தியாதியர்போல் தாமும் மத்தளம் முழக்கவேண்டும் என்று நடராஜப் பெருமானை வேண்ட அவர் "நீ வேண்டிய இதனை பெறவேண்டுவையாயின் காஞ்சியின் கண் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து இவ்வரம்பெற்று இங்கு வந்து மத்தளம் முழக்குவாய் என்று அருள அவ்வண்ணமே வந்து பூஜித்தனர்.
108 லிங்கத்தோடு கூடியுள்ள ஒரு சிவலிங்கம்	மேற்கு பக்கம் நிருதி மூலை	
ஸஹஸ்ரலிங்கம் (ஒரே லிங்கத்தில் 1000 சிவலிங்கம்)	ஸ்ரீ ஏகாம்பர நாதர் ஆலயத்தின் 2-ம் பிராகாரத்தில் வாயு மூலையில்	ஸ்ரீ ராமன், ராவணனை கொன்ற தோஷம் போக்குவதற்கு பூஜை செய்த சிவலிங்கம்.

வாலீஸ்வரர்	ஸ்ரீ ஏகாம்பர நாதர் ஆலயத்தின் மூன்றும் பிரகாரத்தில் கச்சிமயானத்திற்கு கீழ் பால் **மேற்கு பார்த்த சன்னதி**	தேவேந்திரன் மகனுகிய வாலி தன்னைப் போரில் யாவர் எதிர்ப்பினும் அவரது பலத்தில் தனக்கு பாதியும், தோல்வியில்லாத வெற்றியும் வரவேண்டும் என்று பூஜித்தனன் அச்சுயம்புமூர்த்தி வாலியின் வால் தழும்பும் பெற்றுள்ளார்.
விஷ்ணுவேஸ்வரர்	மூன்றும் பிராகாரம் தெற்கு பக்கம்	திருப்பாற்கடலிலிருந்து திருமால் தன் மனையாட்டி முதலாயினருடன் தில்லையில் வந்து திருநடனம் காணத் தவம்புரியுங்கால் தில்லைநாதன் திருக்காஞ்சியில் எம்மை வழி பட்டு வருவையாயின் இங்கு எமது நடனங் களைப் பெறுவாயென்று கட்டளையிட அவ்வண்ணமே வந்து பூஜித்தனர்.
விண்டுவீசர்	ஏகாம்பர நாதர் ஆலயம் ஆயிரங்கால் மண்டபத்தில் உள்ள கோபுர வாயிலுக்கு நேரே தென் பிராகாரத்தில் உள்ளது.	
ஸ்ரீ ராமநாதேஸ்வரர்	ஸ்ரீ ஏகாம்பர நாதர் சன்னதி தெரு. **கிழக்கு பார்த்த சன்னதி**	ஸ்ரீ இராமபிரான் இராவணனை சம்ஹரித்த தோஷம் நீங்குவதற்கு வழிபட்ட ஸ்தலம்.



ஜுரஹரேஸ்வரர்	ஏகாம்பர நாதர் சன்னதி **கிழக்கு பார்த்த சன்னதி** **விமானம்** ப்ரணவாகார விமானம் கர்ப்பக்ருஹத்தில் 4 பக்கமும் ஜன்னல்கள் உள்ளன. (கருங்கல்லினுலேயே உள்ள ஜன்னல்)	வெப்பு நோயை கண்களால் பிறர்க்கு ஆக்குதலால் சுராக்கன் என்னும் பெயருடைய அசுரனை அழிக்கச் சிவபெருமான் ஆக்கிய தலமும், சுர நோயை போக்குதலின் சுரகரம் என்னும் தீர்த்தமும் உடைய அவ்விடத்தே சிவ வீரியத்தைத் தேவர்கள் பொருட்டு அக்கினி உட்கொண்டு கர்ப்பத்தால் வெப்பமுற்ற தேவர் அனைவரும் இறைவன் ஆணைப்படி இத்தீர்த்தத்தில் முழ்கிச் சுரகரேசரை அருச்சித்து சுரம் நீங்கப் பெற்றுப் போய்க் கங்கையில் விடுத்த வீர்யம் சரவணப் பொய்கையில் தங்கி வளர்ந்து ஆறுகப் பெருமானுகி அருள் விளங்கும் தலம் இது.
ஸ்ரீ தான் தோன்றீஸ்வரர் 	ஏகாம்பர நாதர் சன்னதிதெரு **கிழக்கு பார்த்த சன்னதி** சுரகர தீர்த்தமே ‘உப்பேரிகுளம்’என வழங்கப்படுகிறது,	உபமன்யு முனிவர் ‘‘பால்’’ வேண்டி வழிபட்டு பாற்கடலைப் பெற்ற இடம்.

அநந்த பத்ம நாபேஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் லிங்கப்பன் தெரு **கிழக்கு பார்த்த சன்னதி**	வைகுண்ட நாதராகிய திருமால் ஓர் காலத்தில் கைலாயநாதரிடத்தில் போனபோது சிவனும் சிவையும் லீலாவினோதமாய்ச் சூதாடும் கருவிகளைக்கொண்டுசூதாடிக்கொண்டிருப்ப அவ்விடத்துக்கு தான் நடுவராய் நின்று வெற்றிகொண்ட உமா தேவியரது வெற்றியைக் கூறாமல் தோல்வியடைந்துபோன சிவனாரது பக்கமாய் அவருக்கு வெற்றி கூற "அண்ணனே நீ பொய் கூறினாய்" உன்னுடைய நாவானது இரண்டாய்விட்டது ஆகையால் பிளவுடைய நாவைப் படைத்துள்ள பாம்பாகப்போகக்கடவாய்" என்று சபிக்க அக்கணமே பாம்பாகி அனந்தனென்று பெயர்பெற்றுக் காஞ்சிக்கு வந்து அவ்வுருவம் நீங்கப் பூஜித்தனர்.
ஸ்ரீ சீதேஸ்வரர் 	சர்வதீர்த்தத்தின் தென்கரையில் அமைந்துள்ளது. **கிழக்கு பார்த்த சன்னதி**	சீதா தேவி வழிபட்ட ஸ்தலம்.

ஸ்ரீ லக்ஷ்மணேஸ்வரர்	சீதேஸ்வரர் கோவிலுக்கு எதிரில் உள்ளது	ஸ்ரீ லக்ஷ்மணர் பூஜித்து வழிபட்ட ஸ்தலம்
ஸ்ரீ மல்லிகார்ஜுனர்	சர்வதீர்த்தம் தென்கரையில் உள்ளவர். **கிழக்கு பார்த்த சன்னதி**	ஈஸ்வரன் மல்லிகார்ஜுனர் என்னும் பெயருடன் எழுந்தருளி இருக்கின்றார். இது பல முனிவர்கள் பூஜித்து வழிபட்ட இடம்.
தீர்த்தேஸ்வரர்	சர்வ தீர்த்தம் மேற்கு கரையில் உள்ளவர். கிழக்கு பார்த்த சன்னதி	காமாக்ஷி தேவியார் பூஜை செய்யும் காலத்தில் சிவபெருமான் ஏவிய தீர்த்தங்களெல்லாம் திரண்டு வேகமாய் வந்து பெருமானைக் காமாக்ஷி தேவியார் தழுவியிருத்தலைக் கண்டு வேகமடங்கித் தாமும் சிவார்ச்சனை செய்ய ஆசைகொண்டு தீர்த்த ராஜனென்று பிரதிஷ்டை செய்து பூஜித்தனர்.
ஸ்ரீ மன்மதேஸ்வரர் 	சர்வதீர்த்தம் தென்கரையில் உள்ளவர்.	இறைவன் மனத்தில் தோன்றிய மன்மதன் இறைவனை வணங்கி "நான் உயிர்கள் பிறப்பதற்குக் காரணமான ஆண், பெண் சேர்க்கையை உண்டாக்கி, இரதிதேவிக்கு இனியவனாய் ஈவோர் ஏற்போர்களுடைய

		உள்ளத்திலிருந்து அவற்றைச் செய்வித்து மூன்று உலகத்திலும் என் ஆணையைச் செலுத்தும் வரத்தை கொடுத்தருள வேண்டும்' என்றுவேண்டினன். 'இறைவனார் 'இதனை நீ காஞ்சியை அடைந்து, எம்மை வழிபட்டுப்பெறும்' என்றருளச்செய்ய, மன்மதன் அங்ஙனமே காஞ்சியை அடைந்து, சர்வ தீர்த்தக் கரையில் காமேஸ்வரன் என்னும் பெயரால் ஓர் லிங்கம் ஸ்தாபித்து பூஜித்து கருதிய வரங்களைப்பெற்றான்.
ஸ்ரீ ஹிரண்யேஸ்வரர்	லிங்கம் 16 பட்டைகளுடன் கூடியது சர்வதீர்த்தம் மேற்கு கரையில் உள்ளவர்.	இரணியன் வழிபட்டுப் பேருபெற்ற ஸ்தலம்
ஸ்ரீ காசி விஸ்வநாதர் 	சர்வதீர்த்தம் மேற்குகரை மண்டபம் முக்தி மண்டபம்	உலகில் உள்ள சிவ ஸ்தலங்கள் எல்லாம் சூக்குமமாகப் பொருந்தியிருக்கும். அத்தலம் காசி விஸ்வநாதரும் காசியிலும் காஞ்சி சிறந்ததென்று வந்து தங்கியதாகும். இவ்விடத்தில் முக்தி மண்டபம் ஒன்று உள்ளது. அவ்விறைவனை வணங்கி அம்முக்தி மண்டபத்தைக் கண்டவர்கள் முக்தராவார்கள்.

ஸ்ரீ தவளேஸ்வரர்	சர்வதீர்த்தத்தின் வடகரையில் உள்ளவர்	சுவேதன், சுவேதகேது, சுவேத சீகன், சுவேதாச்சுவன், சுவேதலோகிதன், சுதாரன், துந்துமிமுதல் இலகுளீசன் ஈறாக உள்ளவர்களும், மற்றும் பலருமாகிய உருத்திராம்சமாகத் தோன்றிய யோகாசாரியர்கள் யோகாசாரிய பதவியைப் பெறவும், முக்தியடையவும் வேண்டி பூஜித்தனர்.
ஸ்ரீ கங்காதரேஸ்வரர்	சர்வதீர்த்தம் கிழக்குகரை மேற்கு பார்த்த சன்னதி	வருணன் கங்காதேவியோடு சேர்ந்து இறைவனை பூஜித்து நீருக்கும், நீர்வாழ் உயிர்களுக்கும் தலைவனாதலைப் பெற்றனன். இத்தலம் "கங்காவரேஸ்வரம்" எனப்படும்.
ஸ்ரீ செவ்வந்தீஸ்வரர் 	பஞ்சுப்பேட்டைக்கு அருகில் உள்ள விவசாயப் பண்ணையின் உள்ளே உள்ள தலம். மேற்கு பார்த்த சன்னதி தீர்த்தம் - சூல தீர்த்தம்	வாயுதேவன் கந்தவாகனன் என்னும் பெயர் பெற செவ்வந்தி (சாமந்தி) மலர்களைக் கொண்டு பூஜித்தனன். அதனால் செவ்வந்தீஸ்வரன் எனப் பெயர்பெற்றனர். இவ்விடத்தில் வைரவமூர்த்தியினுடைய சூலாயுதத்தினால் உண்டாக்கப்பட்ட சூல தீர்த்தம் ஒன்று உள்ளது.

ஸ்ரீ கங்கணேஸ்வரர்	சின்னகம்மாளத் தெரு. **கிழக்கு பார்த்த சன்னதி** **தீர்த்தம்:- கங்கணதீர்த்தம்**	இது பாதாளேஸ்வரர் கோவில் என வழங்கப்படுகிறது. இது காமாக்ஷி அம்மையார் ஸ்ரீ ஏகாம்பரநாதரை வழிபடுவதற்கு கங்கணம் கட்டிக்கொண்ட ஸ்தலம். கங்கண தீர்த்தம் எதிரில் மறைக்கப்பட்டிருக்கிறது,
ஸ்ரீ கடகேஸ்வரர்	கம்மாளத் தெரு தீர்த்தம்:- கடக தீர்த்தம்	காமாக்ஷி அம்மையார் இறைவனை வழிபட்டு கடகம் தரித்துக்கொண்ட ஸ்தலம்.
ஸ்ரீ இறவாஸிதானேஸ்வரர்	கம்மாளத் தெருவில் கிழக்கு பார்த்த சன்னதி தீர்த்தம் :- ஞான தீர்த்தம் (வெள்ளைகுளம்) **பல்லவர் கோயில்**	மார்கண்டேய முனிவர் யமபயம் தனக்கு உண்டாகாதிருத்தற்கும் என்றும் முக்தராய் வாழ்வதற்கும் பூஜித்தனர். சுவேதன், சாலங்காயின முனிவர் பேரனும் பூஜித்த இடம்.
பிறவாஸ்தானேஸ்வரர் (அபுனர்ப்பவேஸ்வரர்) 	பெரியகாஞ்சீபுரம் அப்பாராவ் முதலியார் தெரு விற்கு பின்னால். வெள்ளை குளம் தென்கரை, **மேற்கு பார்த்த சன்னதி** **பல்லவர் காலத்து கோயில்.**	வாமதேவர் என்னும் முனிவர் தாயினது கருப்பத்திலிருக்கும்போதே பிறவிக்கு அஞ்சி பிறவாமையை அளிக்கவேண்டும என்று அங்கேயே இறைவனை இருதயத்தில் வழிபட இறைவனார் அவருக்கு தோன்றி நீ உலகத்திற் பிறந்து காஞ்சியில் எம்மை

		பூஜித்தால் உன்னைப் பிறவி அணுகாது. என்றருளினர். அங்ஙனமே வாமதேவ முனிவர் பூமியிற் பிறந்து க ஞ்சியை அடைந்து ஓர் இலிங்கம் அமைத்து ஸ்தாபித்து பூஜித்து பிறவி நீங்கப் பெற்ருர்.
முக்தீஸ்வரர்	கம்மாளத் தெரு. **மேற்கு பார்த்த சன்னதி** இறவாஸ்தானத்திற்கு எதிரில் **சித்திரப்பிரதிஷ்டை** **பாதுகை பிரதிஷ்டை**	வாமதேவ முனிவர் இறைவன் திருவருளினல் கயிலை அடைந்து, இறைவனை வணங்கி அவ்விறைவன் கொடுத்த ஓர் லிங்கத்தைப் பெற்று மீளவுங் காஞ்சியை அடைந்து பிறவாஸ்தானத்திற்கு மேற்கில் முக்தீஸ்வரர், என்னும் பெயரால் ஸ்தாபித்து போற்றினர்.
எதிர்வீரட்டானேஸ்வரர்	கம்மாளத்தெரு இறவாஸ்தானத்திற்கு பக்கத்தில் சற்று வடக்கே தள்ளி **கிழக்கு பார்த்த சன்னதி** சித்திர பிரதிஷ்டை	



மஹாலிங்கேஸ்வரர்	அப்பாராவ் முதலி தெரு **மேற்கு பார்த்த சன்னதி** **பெரியலிங்கம்**	**ஹரி, பிரமர்கள் ஓர் பிரளயத்தில் தாம் பரமென்று மன்ருடி நிற்ப இருவர்க்கும் பரமாகிய பரமன் மஹாலிங்கமாய்த் தோன்றி இருவரையும் அபரங்களாக்க பின்னர் இருவரும் முன்போல் உலகினர்க்குப் பரமாயிருப்ப பூஜித்தனர்.**
ஸ்ரீ அருணஜலேஸ்வரர்	அப்பாராவ் முதலி தெரு வெள்ளைகுளத்திற்கு தெற்கு கரை **கிழக்கு பார்த்த சன்னதி** ஆவுடையார் சதுரம்	
திரு வீரட்டானேஸ்வரர் சாக்கியநாயனுர் முக்தி யடைந்த தலம் 	அப்பாராவ் தெரு கோடி வெள்ளைகுளம் கிழக்கு கரை **மேற்குபார்த்த சன்னதி** பரிவாரதேவதைகள் **சித்ரரூபமாகவும், பாதுகா ரூபமாகவும்** உள்ளனர்.	ஓர் சம்ஹார காலமாகிய இரவில் சிவ பரஞ்சுடர் உமாதேவியர்களான வீரமாகிய அட்டகாசத்துடன் ஆனந்த நடனஞ் செய்து புனருற்பவமாகிய உதய காலத்தில் இலிங்க உருவமாயினர். அக்காரணத்தால் வீராட்டஹாஸேஸ்வரர் எனப் பெயர் பெற்றனர். அந்த லிங்க மூர்த்தியை அநேக சித்தர்கள்



சாக்கிய நாயனுர் எறிந்த கல் மாடத்தில் வைத்து பூஜிக்கப்படுகின்றது.

பூஜித்து அற்புதமான சித்திகளைப் பெற்றனர் கொங்கண முனிவரென்பர் இச்சிவலிங்க மூர்த்தியே இக்காஞ்சியில் ஸம்ஹாரகாலத்தில் எல்லாவுலகங்களையும் நீருகத் தன்னிடத்தில் ஒடுக்கிக் கொள்வது உண்மையாயின் யான் வைத்திருக்கும் இக்குளிகையினை நீருக்கி உட்கொள்ளல் வேண்டும் என்று சொல்லி அக்குளிகையினை அம்மூர்த்தியின் மேல் வைத்தனர். உடனே அது சாம்பராய் உள்ளே சென்று விட்டது. அது கண்ட முனிவர் அந்தோ என்று அதிசயித்து அவ்விடத்தில் தானேயிருந்து சர்வ சித்தியும் தனக்குண்டாகப் பூஜித்தனர். இவ்விலிங்க மூர்த்தியை ஓர் காலத்தில் லக்ஷ்மி தேவியானவள் நாராயணரைப் பார்த்து நீர் சிவபெருமானைப் போலும் பவள மேனியாயிருப்பீராயின் பொன்னிறமுடைய எனக்கு களிப்பாகவிருக்குமென்ன அவர் பச்சைவண்ணப் பெருமாள் என இங்கு வந்திருந்து பவள நிறம் பெறுவதற்குத் தன்னுடைய சக்ரத்தால் ஒரு தீர்த்தமுண்டாகி நாடோறும் பதினுலாயிரம் தாமரை மலர்களால் பூஜித்து பவள நிறம் பெற்றனர்,

ருத்திரகோடீஸ்வரர்	கோனேரி குப்பம் கிழக்கு பார்த்த சன்னதி ரயில்வே லைன் தாண்டி கோனேரி குப்பம் செல்லும் வழி	கோடிருத்ரர்களின் பிரபலஸ்தலம்,
பூதநாதேஸ்வரர்	பூக்கடை சத்திரத்தின் வாயிலில் கிழக்கு பார்த்த சன்னதி	
மச்சேஸ்வரர்	கீழண்டை ராஜவீதி கிழக்கு பார்த்த சன்னதி	சோமுகனென்னும் ஓர் அசுரன் வேதங்களை கவர்ந்துகொண்டு கடலில் ஒளித்தனன். அதனால் வேள்வியில்லையாக வருந்திய தேவர்கள் திருமாலைச் சரணடைய அவர் மச்ச வடிவங்கொண்டு காஞ்சியைஅடைந்து இப்பி தீர்த்தக்கரையில் மச்சேசரை ஸ்தாபித்து வழிபட்டுத் திருவருள் பெற்று கடலிற் புகுந்து சோமுகாசுரனையும் அவனுக்குத் துணையாய் சங்குருவம் கொண்டிருந்த பஞ்சசனையுங்கொன்று சங்குவடிவமாகிய பஞ்சசன் எறும்பைப் பாஞ்ச சன்னியமாகக் கொண்டு, வேதங்களை பிராமணர்களுக்கு கொடுத்தனர்.
ஸ்ரீ முக்தீஸ்வரர்	கீழண்டைராஜவீதி மேற்கு பார்த்த சன்னதி பல்லவர்கள் காலத்து கோவில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் பிரும்மோற்சவத்திற்கு ம்ருத்ஸங்க்ரஹணம் செய்யும் இடம்	



அபிராமீஸ்வரர்	பஸ்நிலையத்திலிருந்து காமாக்ஷி அம்மன் கோவிலுக்கு போகும் வழியில் ஸ்ரீ சங்குபாணி விநாயகர் கோவிலுக்கு எதிரே உள்ளவர் **கிழக்கு பார்த்த சன்னதி**	திருமால் மாவலியை அடக்க வாமன உருவம் கொள்ளவும் பின்னர் உலகை அளக்க திரிவிக்கிரம வடிவம் கொள்ளவும் பூஜித்தனர். மாவிலியை வெற்றிகொண்ட பின்னரும் வந்து வாமன தீர்த்தமென்று ஓர் தீர்த்தமுண்டாகிப் பூஜித்து ஆனந்தங் கொண்டு சிவபெருமானுக்கு தானெடுத்த உலகளந்த உருவை காட்டி அவ்வுருவ மாகவே நின்றனர்.
நகரீஸ்வரர்	கீழண்டை ராஜவீதி கோடி பஸ் நிலையம் பின்புறம் ஆஸ்பிடல் ரோடு போகும் வழி	
மதங்கீஸ்வரர்	ஆஸ்பிடல் ரோடு மிஷின் மருத்துவமனைக்கு வடகிழக்கில் சாலைக்கு வடவண்டையில் உள்ளது. **மேற்கு பார்த்த சன்னதி**	மதங்கமுனி என்பவரால் ஐம்புலன்களின் மதமடங்கப் பூஜிக்கப்பட்டவர்.



ஸ்ரீ ஹரிசாபபயஹரேஸ்வரர் (அரிசாப பயந்தீர்தேஸ்வரர்)	நெல்லுக்காரத் தெருவில் ஷண்முகஸ்டுடியோ பக்கத்தில் உள்ள மூங்கில் தொட்டியின் உள்ளே இருக்கின்ற தலம். **கிழக்கு பார்த்த சன்னதி**	**திருமால் தனக்குப் பிருகுமுனிவரால் சேர்ந்த சாபத்துக்கு அஞ்சிச் சிவபெருமானது நீக்கிரகத்தாலும், அனுக்கிரஹத்தாலும் போக்கிக்கொள்ளவந்து பூஜித்தனர்.**
ஸ்ரீ கச்சபேஸ்வரர்	ராஜவீதி **கிழக்கு பார்த்த சன்னதி** பிறசன்னதிகள் பஞ்ச சந்தி விநுயகர் துர்கை, சாஸ்தா, சரஸ்வதி, பைரவர் சூரியன், பூஜிக்கப் பட்டவர் **சதுர்முகேஸ்வரர்** கோவில் 2-ம் பிரகாரம்	**திருமால் பாற்கடலில் மந்திரமலையைத் தாங்க கச்சப (ஆமை) உருக்கொண்டு காத்த பின்னர் செருக்குற்ற கடலைக் கலக்கிய காலத்தில் சிவபெருமான் அவ்வாமையின் செருக்கடக்கி ஓட்டை எடுத்து மாதனில் பரக்கமாக மார்பிலணிந்து கொள்ளவே பூர்வஞானம் பிறந்து சிவாபராதம் செய்துவிட்டோம் என்று அஞ்சி அவ்வபராதம் நீங்க பூஜிக்கப்பட்ட தலம். பிருமன் கலைமகளோடு வந்து சிருஷ்டித் தொழில் செய்யும் அனுக்கிரஹம் பெறப் பூஜித்தனன்.**



ஸ்ரீ இஷ்டசித்தீஸ்வரர்

கச்சபேஸ்வரர் ஆலயத்தினுள்
மேற்கு பார்த்த சன்னதி
தீர்த்தம்
இஷ்டசித்தி தீர்த்தம்

அசுர குருவாகிய சுக்ராச்சாரியார் வஜ்ஜிர யாக்கையும், மிருத சஞ்சீவினியும் பெறப் பூஜித்தனன். இங்கு சுக்ராச்சாரியினுடைய ஆக்ஞையால் ததீச முனிவரும் வந்து பூஜித்து வஜ்ர சரீரத்தைப் பெற்றனர். தீர்த்தம் இஷ்டசித்தி தீர்த்தம். இதனுடைய மகிமையை சொல்ல அளவிற்கரியது. வார ஸ்நானங்களில் ஒன்று.

தீர்த்தத்தின் வடக்கில்—தருமசித்தீஸ்வரர்
கிழக்கில்—அர்த்தசித்தீஸ்வரர்
தெற்கில்—காமசித்தீஸ்வரர்
மேற்கில்—மோக்ஷசித்தீஸ்வரர்

ஸ்ரீ அமரேஸ்வரர்



மேற்கு ராஜ வீதியில்
மேற்கு பக்கம் சிறிது
உட்சென்று உள்ளது.
வாணியர் மண்டபம்
பக்கத்து சந்து
கிழக்கு பார்த்த சன்னதி
பல்லவர் காலத்து கோயில்

தேவர்கள் வரத்தினும் வன்மையிலும் சிறந்த அசுரர்களிடத்தில் தங்களுக்கு வெற்றியுண்டானமை சிவபெருமானுல் என்று உணராது தங்களால் என்றுணர்ந்து பெரும் போரில் தலைப்பட்டு நிற்க. இவர்களது வெற்றி திரத்தை சிவபெருமான் துரும்பு ஒன்று நாட்டி அவர்களது அகங்காரத்தை ஒழித்தனர். அஃதொழிந்தபின்னர் உம்மையன்றி எங்களால் ஓரணவும் அசைக்க முடியாதென்று யாவரும் கூடிப் பூஜித்தனர்.

ஸ்ரீ ஐராவதேஸ்வரர் (பேட்டை)	கச்சபேஸ்வரர் கோவிலுக்கு வடகிழக்கில் ராஜவீதி தென்கோடியில் சாலைக்கு கிழ்பால் உள்ளது; **மேற்கு பார்த்த சன்னதி பல்லவர்கள் கட்டிய கோவில்**	தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அக்கடலில் தோன்றிய வெள்ளை யானையாகிய ஐராவதம் இந்திரனைத் தாங்குதற்குப் பூஜித்த தலம்.
ஸ்ரீ மஹாசாஸ்தேஸ்வரர்	மேலண்டை ராஜவீதியில் வாணியர் சத்திரத்தை ஒட்டி உள்ளது; **கிழக்கு பார்த்த சன்னதி**	ஹரிஹரபுத்ரராகிய சாஸ்தா பிறந்தவுடன் சிவபெருமானை நோக்கி "உனது திருவருள் பெறுவதற்குரிய தலைமைத் தன்மை எனக்கு வேண்டும்" என்று பிரார்த்திக்க அது காஞ்சியில் பூஜித்து பெருவாய் என்று கட்டளையிட, அதுபோல் வந்து பூஜிக்கப்பட்ட தலம் (கூரைமட்டும் போடப்பட்டுள்ளது)
ஸ்ரீ அகஸ்தீஸ்வரர்	கைலாசநாதர் கோவிலுக்கு போகும் சாலையில் வடக்கு பக்கம் அமைந்துள்ளது **உபநிஷத்பிரம்மேந்திராள் மடத்தின் உள்ளே இருக்கின்ற தலம்**	பொதியமலைக்கு செல்லும் அகஸ்தியர் தங்கி ஆஸ்ரமம் ஏற்படுத்திக்கொண்டு, முனிவர்கள் பலர் வழிபட்ட காரணத்தினால் அகஸ்தீஸ்வரர் என்று பெயர்.



ஸ்ரீ கைலாசநாதர்	காஞ்சியில் உள்ள பிரபல ஸ்தலம் 1300 ஆண்டுகளுக்கு முன் மகேந்திர பல்லவனுல் கட்டப்பட்டது **லிங்கம் 16 பட்டை** சித்திர வேலைப்பாடுகள் அதிகம் அமைந்த கோவில்.	திருமால் பௌத்தாவதாரம் கொண்டு நாரதரோடு திரிபுரத்துக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குச் சிவ பக்தியின்மை உண்டாகும் வண்ணம் செய்து பின்னர் அம் மஹாபாபம் நீங்க நாரதரோடும் வந்து பூஜித்தனர்.
ஸ்ரீ நாரதேஸ்வரர்	**கிழக்கு பார்த்த சன்னதி**	நாரதர் பூஜித்தது
ஸ்ரீ வில்வநாதீஸ்வரர்	பிள்ளையார் பாளையம்	காஞ்சி புராணத்தில் இல்லை.
ஸ்ரீ காளத்தீஸ்வரர்	திருமேற்றளித்தெரு பிள்ளையார்பாளையம்	
ஸ்ரீ அநாதிருத்ரேஸ்வரர்	பிள்ளையார் பாளையம் நடுத்தெரு **கிழக்கு பார்த்த சன்னதி**	



ஸ்ரீ தக்ஷேஸ்வரர்	பிள்ளையார்பாளையம் கச்சியப்பன் தெரு **மேற்கு பார்த்த சன்னதி**	தக்ஷன் வீரபத்திர மூர்த்தியால் தலையற்றுப் பின்னர் ஆட்டின் தலையைப் பெற்று அவ்வாட்டுக்குரிய ஒலிக்குறிப்போத் ஸ்ரீருத்திரத்தை உச்சரித்துப் போற்றிக் காஞ்சியில் வந்து பூஜித்துக் கணத் தலைமை எய்தினன்
ஸ்ரீ சோளீஸ்வரர் (வைரவேஸ்வரர்)	பிள்ளையார் பாளையம் சோளீஸ்வரன் கோவில் தெரு	வைரவர் !சிவநிந்தையே செய்துகொண்டிருந்த பிரமனது ஐந்தாம் தலையை நகத்தினுற்கிள்ளி அதனைக் கபாலமாகவேந்தி அதில் திருமால் முதலியோருடைப் ரக்த பிக்ஷையேற்றுக் காஞ்சிக்குவந்து பூஜித்தனர். இவருடன் எண்ணப்பட்ட எண்மரும் பூஜித்த லிங்கங்கள் தனித்தனியே உள்ளன.
ஸ்ரீ விஷ்வக்ஸேனேஸ்வரர்	பிள்ளையார் பாளையம் திருவேகம்பன்தெரு	விஷ்வக்ஸேனன் வைரவ ரூப மூர்த்தியின் சூலத்திலிருந்த தன்னைத் திருமால் மீட்பித்தனரானதால் அதற்கு கைம்மாருகத் தக்ஷயாகத்தில் திருமாலிழந்த சக்கரத்தை தான் வீரபத்திர மூர்த்தியிடம் பெற்றுக் கொடுக்கப் பூஜித்தனர்.
ஸ்ரீ மஹாருத்ரேஸ்வரர்	பிள்ளையார் பாளையம் மாதனம்பாளையத்தெரு **கிழக்கு பார்த்த சன்னதி**	



ஸ்ரீ ஆனந்த ருத்ரேஸ்வரர்

பிள்ளையார் பாளையம்
சேர்மன் சுவாமிநாத முதலி
தெரு
கிழக்கு பார்த்த சன்னதி

பிள்ளையார்பாளையம்
சாலைத்தெரு கோடியில்
வலது பக்கத்தில் உள்ள
தோட்டத்தில் உள்ளவர்
கிழக்கு பார்த்த சன்னதி

பிள்ளையார்பாளையம்
சாலைத்தெரு கோடியில்
இடது பக்கம் நிலத்திற்கு
நடுவில் உள்ளவர்
பெரிய சிவலிங்கம்
கிழக்கு பார்த்த சன்னதி



ஸ்ரீ காயாரோஹணேஸ்வரர்	பிள்ளையார்பாளையம் தாயார் குளத்திற்கு அருகில் வேகவதியாற்றின் வடகரையில் உள்ளது. **கிழக்கு பார்த்த சன்னதி** **தீர்த்தம் : காரபாரோகணம்** **வியாழன் வாரஸ்நானம்** விமானம்—தூங்கானை மாடம்	பிரும்ம, விஷ்ணுக்கள் ஒடுங்க வரும் காலங்களில் அவர்களைச் சிவபெருமான் தனது திருமேனியில் ஒடுக்கிக்கொண்டு இவ்விடத்தில் நடனம் செய்து வருகின்றவராதலால் காயாரோகரெனப் பெயர் பெற்றனர், இலக்ஷ்மியினாலும் தேவ குருவினாலும் பூஜிக்கப்பட்டவர்.
ஸ்ரீ சிதம்பரேஸ்வரர்	பிள்ளையார்பாளையம் **கிழக்கு பார்த்த சன்னதி**	
ருத்ரகோடீஸ்வார் (2)	பிள்ளையார்பாளையம்	
ஸ்ரீ மாண்டு கன்னீஸ்வரர் 	ஒக்கப்பிறந்தான் குளத்திற்கு கீழ்ப்பக்கம் (காமாக்ஷி அம்மன் தபஸ் செய்யும் இடம்) மாண்டுகண்ணீஸ்வரர் கோவில் தெரு. **கிழக்கு பார்த்த சன்னதி**	மாண்டுகன்னி முனிவர் அம்மையில் தேவருலகில் அரம்பையரோடு வாழும்போகத்தை இம்மையில் இப்பிறப்பிற்றானே அவ்வரம்பையரோடு கூடி அனுபவிக்க வேண்டி பூஜித்த தலம்.

ஸ்ரீ வன்னீஸ்வரர்

(சகோதர தீர்த்தம்)
ஒக்கப்பிறந்தான் குளத்திற்கு
தென்கரையில்

கிழக்கு பார்த்த சன்னதி

அக்னிதேவன் தன்னுடைய மூன்று சகோதரரும் தேவர்கட்கும் ஆவிகளைத் தாங்கும் வன்மையற்று இறந்துபோகத் தானும் பயந்து சிலநாள் சகோர தீர்த்தத்தில் ஒளிந்திருந்து தேவர்களால் வெளிப்பட்டு அவர்கள் வேண்டிக்கொண்ட வண்ணம் ஆவியைத் தாங்கும் வல்லமையைப் பெற பூஜித்தனன்.

ஸ்ரீ சவுனகேஸ்வரர்
(ஸ்ரீ திருக்காஞ்சீஸ்வரர்)

புத்தேரித் தெருவை
அடுத்துள்ள
சவுனகேசர் தெருவில்உள்ளது
தானப்ப நாயகன் தெரு
சவுனக முனிவர் தம்பெயரால்
சிவலிங்கம் நிறுவி போற்றி
மலநோய் நீங்கி
முக்தி எய்தினர்.

கிழக்கு பார்த்த சன்னதி

சகோர தீர்த்தம் அக்னிதேவன் தான் ஒளிந்திருப்பதற்கு இக்குளத்தருகே வருணனை தன்னையொருவருக்கும் காட்டக்கூடா தென்றும் எனக்கு நீ சகோதரனல்லவா என்றும் பிரார்த்தித்து ஒளிந்திருந்தனராத லால் அக்குளம் சகோதர தீர்த்தமெனப் பெயர்பெற்றது.



ஸ்ரீ குமரகோட்டம் சேனாபதீஸ்வரர்	ராஜவீதி, குமரக்கோட்டத்தி னுள் உள்ள ஈஸ்வரர் **கிழக்கு பார்த்த சன்னதி**	பிரமனைச் சிறை வீடு புரியாமையான் நேர்ந்த பிழைதீர முருகப்பெருமான் தம்பெயரால் தேவசேனாபதீஸ்வரர் எனச் சிவ லிங்கம் இருத்திப்போற்றினர்.
ஸ்ரீ கௌசிகேஸ்வரர்	காமாக்ஷி அம்மன் கோவிலுக்கு ஈசான்யத்தில் (வட கிழக்கு) **கிழக்கு பார்த்த சன்னதி** முழுவதும் கருங்கல்லினால் கட்டப்பட்டவை	உமாதேவியார் கழித்த கருஞ்சட்டையில் தோன்றிய கௌசிகி பூஜித்துப் பெற்ற அருளால் சும்பன் நிசும்பன் என்னும் அசுரரை அழித்துக் காஞ்சியைக் காவல் செய்யும்பேறு பெற்றனர்.
ஸ்ரீ மஹாகாளேஸ்வரர் 	காளியம்மன் கோவிலுக்கு பக்கத்தில் **கிழக்கு பார்த்த சன்னதி**	மாகாளன் என்னும் பாம்பு திருக்காளத்தியில் பூசனைபுரிந்து வீடுபேற்றை விரும்பப் பெருமான் கட்டளைப்படி காஞ்சியை அடைந்து சிவலிங்கம் நிறுவிப் போற்றி அருள்பெற்றுப்போய்த் திருக்காளத்தியில் முக்தியை எய்திற்று.

ஸ்ரீ கண்ணேஸ்வரர்	பெரிய காஞ்சிபுரம் செங்கழு நீரோடை வீதியில் மொட்டை கோபுரத்திற்கு எதிரில் உள்ளது	திருப்பாற்கடலில் எழுந்த விடத்தால் கரிந்து வெப்புற்ற திருமால் கண்ணேசர் என்ற பெயரால் சிவலிங்கம் நிறுவிப்போற்றி அப்பெருமான் ஆணைப்படி திருவேகம்பத்தில் திருமுடியில் உள்ள நிலவின் அமுத கிரணத்தால் வெப்பம் நீங்கி நிலாத்துண்டப் பெருமாள் என்னும் திருநாமம் பெற்றனர்.
ஸ்ரீ மோஹினீஸ்வரர்	கண்ணேஸ்வரருக்கு பக்கத்தில்	திருமால் மோகினியுருவம் கொண்டு அசுரரை மயக்கிய பாவம் நீங்கப் பூஜித்தனர்.
ஸ்ரீ உருத்திரகோடீஸ்வரர் (3) (மொட்டை கோபுரம்)	செங்கழு நீரோடை வீதி	ஓர் கற்பத்தில் உருத்திராதிகாரத்திலிருந்த கோடி ருத்திரர்கள் முக்தி பதம் விரும்பிப் பூஜித்தனர்.
ஸ்ரீ த்ரிகால ஞானேஸ்வரர் (முக்கால ஞானசேர்)	பேருந்து நிலையத்தினுள் மேற்கு பார்த்த சன்னதி	முக்காலமும் அறிந்துகொள்ள எண்ணிய பலஞானிகளால் பூஜிக்கப்பட்டவர்.



ஸ்ரீ சித்தீஸ்வரர் (மஞ்சள் நீர் கூத்தர்)	காமராஜர் தெரு முருகன் திரை அரங்கம் பக்கத்தில் **கிழக்கு பார்த்த சன்னதி மஞ்சள் நீர் நதி**	சிவ பரஞ்சுடர், காமாக்ஷிதேவியரது ஸ்நான தீர்த்தமாகிய மஞ்சள்நீர் நதியில் ஆனந்த கூத்தாடிப் பின் சிவலிங்க மூர்த்தியாயினர். இவர் பல சித்திகள் வேண்டிய பல சித்தர்களால் பூஜிக்கப்பட்டவர்.
ஸ்ரீ ஆதிபதீஸ்வரர்	ஆலடி பிள்ளையார் கோவிலுக்கு போகும் வழி தீபப்பிரகாசர் கோவிலுக்கு எதிரே **கிழக்கு பார்த்த சன்னதி**	சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள் பிரமனுடைய யாகத்தை அழித்ததற்கு நடு ராத்திரியில் வந்த வேகவதி நதியைக் காண்பதற்கு முடியாமல் தான் தீபம்போல் பிரகாசிப்பதற்காகப் பூஜித்த பெருமானர்.
ஸ்ரீ பணாதரேஸ்வரர்	ஆலடி பிள்ளையார் கோவில் தெரு **கிழக்கு பார்த்த சன்னதி** பிராகாரத்தில் **சித்தீஸ்வரர்**	கருடனுக்கஞ்சிய சர்ப்ப சிரேஷ்டங்கள் சந்திரசேகருக்கு நாம் ஆபரணங்களாக ஆவோமாயின் நாம் கருடனைக் கண்டு "ஏன் கருடா சுகமா" என்று கேட்கலாமன்றோவென எண்ணிப் பூஜித்தன.



ஸ்ரீ விருபாக்ஷீஸ்வரர்	வளத்தீஸ்வரன் கோவில் தெரு **கிழக்கு பார்த்த சன்னதி** கீரை மண்டபத்திற்கு பின்பக்கம்	
ஸ்ரீ வளத்தீஸ்வரர்	காவலான் கேட் அருகில் வளத்தீஸ்வரன் கோவில் தெரு	இங்கு முனிவர் பலர் அநேக தர்மங்களைப் புரிய இறைவன் அனுக்ரஹித்து அருள் பாலித்த ஸ்தலம். தருமங்கள் பலசெய்த காரணத்தால் அறம்வளத்தீஸ்வரர் என்ற பெயருடன் எழுந்தருளி உள்ளார்.
ஸ்ரீ கணிகண்டீஸ்வரர்	கருக்கினில் அமர்ந்தவள் கோவில் தெரு	
ஸ்ரீ நகரீஸ்வரர் (செட்டி கோவில்)	மேட்டுத்தெரு பஸ்டாண்டு எதிரில் **கிழக்கு பார்த்த சன்னதி**	
ஸ்ரீ பராசரேஸ்வரர் 	காந்தி ரோடு, செட்டித் தெருக் கோடியில் உள்ள வழக்கறுத்தீஸ்வரர் ஆலயத் தினுள் (படிகள் இறங்கி	பராசர முனிவர், தனது பிதாவாகிய சக்தி என்பவரும் அவருடன் பிறந்த நூற்றுவரும் சுதாசனென்றும் அசுரனால் கொல்லப் பட்டார்களென்று அறிந்து அசுர குலத்தை

	போக வேண்டும் பாதாளீஸ்வரர்) கிழக்கு பார்த்த சன்னதி	நாசஞ்செய்ய எண்ணிப் பூஜிக்கப்பெற்ற தலம்.
ஸ்ரீ வழக்கறுத்தீஸ்வரர்	காந்திரோடு ஸ்டேட் பாங்க் எதிரில் செட்டித் தெரு கோடி கிழக்கு பார்த்த சன்னதி	காஞ்சிபுராணத்தில் இல்லை.
ஸ்ரீ முக்தீஸ்வரர்	காந்தி ரோடு வண்ணான் கோவில் என்று வழங்கப்படுகிறது கிழக்கு பார்த்த சன்னதி 'திருகுறிப்புத் தொண்ட நாயனார் முக்தியடைந்த தலம்	முக்தீஸ்வரர் தம்பிரான் தோழரால் திருக் குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன் என்று போற்றப்பட்ட திருக் குறிப்புத் தொண்டருக்கு முக்தி கொடுத்தவர்
ஸ்ரீ கருடேஸ்வரர் 	முக்தீஸ்வரர் ஆலயத்தினுள் கிழக்கு பார்த்த சன்னதி	கருடன் தன் தாய்க்கு சக்களத்தியினால் நேர்ந்த சிறையை மீட்பதற்காகப் பூஜித்தனர்.

ஸ்ரீவியாஸ சாந்தாலிஸ்வரர்	சின்ன காஞ்சீபுரம் வெங்குடி ஆஸ்பத்திரிக்கு எதிரில் உள்ள தெருவின் கோடியில் வலது பக்கத்தில் உள்ளவர் **கிழக்கு பார்த்த சன்னதி**	நந்திகேஸ்வர சாபத்தால் பீடிக்கப்பட்ட வியாஸர் பகவானைப் பிரார்த்திக்க, பகவான் நந்திகேஸ்வரரின் சாபத்தை தான் மாற்றுவதற்கு இல்லையென்றும் மோக்ஷபுரியில் ஒன்றான காஞ்சி க்ஷேத்திரத்தில் போய் வசிக்குமாறும் கட்டளையிடவே, பிறகு காஞ்சியை அடைந்து சாந்தாலீஸ்வரரை ஆராதித்தார். அதனால் இவருக்கு வியாஸ சாந்தாலீஸ்வரர் என்று பெயர் வழங்கப்படுகிறது.
ஸ்ரீ வசிஷ்டேஸ்வரர்	சாந்தாலீஸ்வரர் கோவிலுக்கு பக்கத்தில் **மேற்கு பார்த்த சன்னதி**	வசிஷ்டர் பூஜித்த தலம்
ஸ்ரீ மணிகண்டீஸ்வரர்	திருக்கச்சி நம்பித் தெரு **மேற்கு பார்த்த சன்னதி**	தேவரும் அசுரரும் தங்களால் விஷமுண்ட அபராதம் நீங்கப் பூஜித்தனர்.
ஸ்ரீ விஷகண்டீஸ்வரர் 	மணிகண்டீஸ்வரர் ஆலயத்தினுள்	தேவர்கள் சிவபெருமான் தாங்கள் செய்த குற்றத்தை எண்ணாது அமிர்தம் அளித்த கருணையை நாடிப் பூஜித்தனர்,

ஸ்ரீ பணாமணீஸ்வரர்	ஐயங்கார்பாளையத் தெரு **கிழக்கு பார்த்த சன்னதி**	வாசுகி தன்னிடத்திலுண்டாகிய விஷத்தைச் சிவபெருமான் புசித்தனரே என்று தனது முடியிலுள்ள மணிகளால் அர்ச்சித்தனர்.
ஸ்ரீ புண்ணியகோடீஸ்வரர்	சின்ன காஞ்சீபுரம் செட்டித் தெருவிற்கு தென் கிழக்கில் உள்ளது. **கிழக்கு பார்த்த சன்னதி** (அமது படித் தெருவின் பின் உள்ளது)	திருமால் பிரமனையும் பதினான்கு உலகங்களையும் படைக்க விரும்பித் தனக்கு பொற்றாமரைப் பொய்கையினின்றும் மலர் பறித்துதவிய கஜேந்திரன் என்னும் யானை ஆதிமூலம் என்றலறல்பற்றி முதலையைச் சக்கரத்தால் அவ்வியானையைக் காத்து பூத்தொண்டினைக் கொண்டு சிவபிரானை அருச்சித்து ஆங்கு செய்யப்படும்புண்ணியம் ஒன்று கோடியாகவும், "வரதா வரதா" என இறைவனைப் பலமுறை எதிரெழுந்தருள் கையில் போற்றி வரதராஜன் என்றும் திருப்பெயர் தனக்கு உண்டாகவும் வரம் அருளப்பெற்ற திருத்தலம்.
ஸ்ரீ வேதவனேஸ்வரர்	புண்ணியகோடீஸ்வரர் கோவிலுக்கு தெற்கே சிறிது தூரத்தில் **கிழக்கு பார்த்த சன்னதி**	புராணத்தில் சொல்லப்படவில்லை.



சிவாஸ்தானம்
ஸ்ரீ பிரும்மபுரீஸ்வரர்



தேனம்பாக்கம் போகும் வழி
ஸ்வயம்புலிங்கம்
கிழக்கு பார்த்த சன்னதி
மூலஸ்தானத்தில்-ஈஸ்வர
ருக்கு பின்னால்
ஆதிசங்கரர், சோம கணபதி
உள்ளனர்.
கஜபிருஷ்ட விமானம்
தீர்த்தம்-**பிரும்ம தீர்த்தம்**

பரமன் திருமாலொடும் உலகைப் படைக்கும் ஆற்றலை வேண்டிக் கயிலைப் பெருமானார் ஆணைப்படி புண்ணிய கோடீசத்திற்கு கிழக்கில் 'தேனம்பாக்கம்' என்னும் இடத்தில் பிரம தீர்த்தம் தொட்டுக் கரையில் சிவ லிங்கம் ஸ்தாபித்துப் போற்றினன். பின்பு சோமயாகம் தொடங்குகையில் தேவர் முனிவர் சூழ்ந்திருக்கும்போது ஸரஸ்வதி நீரினும். பின்பு மரங்களினும் சூக்கும வடிவிற்கரந்தனர். மனைவியாகிய ஸரஸ்வதி யைக் காணாது சாவித்ரி, காயத்ரி ஆம் மற்றைய இருமனைவியரொடும் பிரமன் யாகம் செய்தனன். பிரமனைக் கண்டு வெகுண்ட ஸரஸ்வதி நதியுருவாய் யாகத்தை அழிக்க வருகையில் வேள்வித் தலைவராகிய சிவபெருமானார் வேள்வி வடிவினராகிய திருமாலை ஏவ அவர் மூன்றுமுறை தடுத்துக் கடலை நோக்கிச் செல்லவிட்டனர். சிவ பிரானார் தோன்றி, 'திருமாலே, நீ யாம் சொன்னவண்ணம் செய்தமையின் 'சொன்ன



வண்ணம் செய்தவள்' எனவும் இரவிருளில் நதியைக் காணவேண்டி விளக்கொளியாய் நின்றமையின் விளக்கொளி பெருமாள்' என்னும் பெயர் பெற்று எவரையும் இன் புறுத்து எனவும் அருளி மறைந்தனர்,

நதியுருவம் மாறி மீண்டும் மரவடிவில் மறைந்த ஸரஸ்வதியை அம்மரத்திற் கொண்டு ருத்விக்குகளால் வேறு பிரித்து உருவுகொண்ட அவருடன் யாகத்தை செய்து முடித்தனன். பிரமன் காட்சிவழங்கிய அம்மை அப்பர் திருவடிகளை வணங்கி இத் தீர்த்தத்தில் மூழ்கினவரும், இவ்விலிங்கத்தை வழிபட்டவரும், முக்தியை அடையவும் தன்னுடைய இருக்கையாகிய அத்தானத் தைச் சிவபெருமானுக்கு வழங்கினமையின் சிவாத்தானமென வழங்கவும் வரம் பெற்றனன். மேலும் திருமாலையும் உலகங் களையும் படைக்கும் ஆற்றலையும்பெற்றனன்

காஞ்சீபுரத்தில் ஸ்ரீ பெரியவாள் ஆக்ஞைப்படி கட்டப்பட்ட கோவில்கள்

1.	வரதராஜேஸ்வரர்	சின்ன காஞ்சீபுரம், தேனம்பாக்கம் போகும் வழியில் வேகவதி ஆற்றின் வடக்கு கரையில் உள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
2.	காஸ்யபேஸ்வரர்	சின்ன காஞ்சீபுரம் பச்சையப்பன் மகளிர் கல்லூரி போகும் வழியில் ஸ்ரீ அங்காளம்மன் கோவில் பக்கத்தில் உள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
3.	அகஸ்தீஸ்வரர் அத்ரீஸ்வரர்	பச்சையப்பன் மகளிர் கல்லூரி காம்பவுண்டினுள் உள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
4.	தான்தோன்றீஸ்வரர்	சின்ன காஞ்சீபுரம் சாந்தாலீஸ்வரர் கோவில் முன்புறம் உள்ள அரசமரத்தடியின் கீழ் உள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
5.	கைலாசநாதர் (16 பட்டை) (மேற்கு)	செவிலிமேடு ஏரிக்கரை மேல் உள்ள சிவன் கோவில் மேற்கு பார்த்த சன்னதி
6.	தக்ஷிண கைலாசநாதர் (8 பட்டை)	செவிலிமேடு ஏரிக்கரை மேல் உள்ள சிவன் கோவிலில் தெற்கு பக்கம் உள்ள சிவன் கோவில் கிழக்கு பார்த்த சன்னதி

7. உத்தர கைலாசநாதர் (8 பட்டை)
செவிலிமேடு ஏரிக்கரை மேல்
உள்ள சிவன் கோவிலில்
வடக்கு பக்கம் உள்ள
சிவன் கோவில்
கிழக்கு பார்த்த சன்னதி

8. இந்திரேஸ்வரர் (16 பட்டை)
பெரியகாஞ்சீபுரம்,
கைலாசநாதர் கோவில்
பின்புறம் புத்தேரி கிராமத்திற்கு
பக்கத்தில் உள்ள நிலத்திற்கு
அருகில் உள்ள கோவில்
கிழக்கு பார்த்த சன்னதி

9. ஜயந்தேஸ்வரர் (32 பட்டை)
பெரிய காஞ்சீபுரம்
கைலாசநாதர் கோவில்
பின்புறம் உள்ள
பனந்தோப்பின் நடுவே
கட்டப்பட்ட கோவில்.

10. கற்கீஸ்வரர்
பிள்ளையார்பாளையம்
போகும் வழியில் உள்ள
ஐயனாரப்பன் கோவில்
பின்புறம் உள்ள நிலத்தில்
கட்டப்பட்ட கோவில்
கிழக்கு பார்த்த சன்னதி

11. லக்ஷ்மீஸ்வரர்
பிள்ளையார்பாளையம்
போகும் வழியில் உள்ள
ஐயனாரப்பன் கோவில்
பின்புறம் உள்ள நிலத்தில்
கட்டப்பட்ட கோவில்
கிழக்கு பார்த்த சன்னதி

12. பருதீஸ்வரர்
பெரிய காஞ்சீபுரம்
பஞ்சுப்பேட்டை அடுத்த
பருத்திகுளமேட்டின்மேல்
கட்டப்பட்டுள்ள கோவில்
கிழக்கு பார்த்த சன்னதி

13.	ம்ஹாதானேஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் காளியம்மன் கோவில் பக்கத்தில்உள்ள தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள கோவில்
14.	மல்லிகார்ஜுனேஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் கோனேரிகுப்பத்தில் உள்ள மாதாகோவில் பின்புறம் உள்ள தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
15.	மல்லிகாவனேஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் கோனேரிகுப்பம் மாதா கோவிலின் பின்புறம் உள்ள மல்லிகைப்பூ தோட்டத்தில் கட்டப்பட்டுள்ள சிவன்கோவில். கிழக்கு பார்த்த சன்னதி
16.	மஹாகாளேஸ்வரர்	கோனேரிகுப்பம் கோவிலாத்தம்மன் கோவில் பின்புறம் கட்டப்பட்டுள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
17,	பஞ்சமுகேஸ்வரர்	கோனேரிகுப்பம் வெள்ளை குளக்கரை மேட்டின்மேல் கட்டப்பட்டுள்ள கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
18.	வீரராகவேஸ்வரர் லக்ஷ்மணேஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் புத்தேரித் தெரு ஸ்ரீசுப்ரமண்யர் கோவிலுக்கு தென்புறம் உள்ள நிலத்தில் கட்டப்பட்டுள்ள சிவன் கோவில் கிழக்கு பார்த்த சன்னதி

19.	உரோமசரேசர்	மாமல்லன் நகர் அடுத்த ரயில்வே லைனுக்கு பக்கத்தில் மேட்டின்மேல் கட்டப்பட்ட கோவில் கிழக்கு பார்த்த சன்னதி
20.	சிவலிங்கம்	பெரிய காஞ்சீபுரம் சர்வ தீர்த்தம் கிழக்கு கரையில் கட்டப்பட்ட கோவில்
21.	ப்ரம்மண்யேஸ்வரர்	வேளிங்கபட்டரை தங்கவேல் முதலியார் தோட்டம் பார்க்கவேஸ்வரர் கோவில் பக்கத்தில் கட்டப்பட்ட கோவில்
22.	மண்டலேஸ்வரர்	பெரிய காஞ்சிபுரம், நாராயணசேவாஸ்ரமத்திற்கு எதிரில் உள்ள தோட்டத்தில் உள்ளவர்.



காஞ்சிபுரத்தில் ஆவரணம் இல்லாமல் ஈஸ்வரன் மட்டும் உள்ள இடங்கள்

1,	கௌதமேஸ்வரர்	உத்திரமேரூர் செல்லும் பாதையில் வேளிங்க பட்டரை அருகில் அரசமரத்தடியின் கீழ் உள்ளவர்.
2.	சக்தீஸ்வரர்	சின்னகாஞ்சீபுரம் ராஜாஜி மார்க்கெட்டின் பின்புறம் பாலாஜி தியேட்டர் பின்புறம் உள்ள வாழை தோட்டத்தின் நடுவில் உள்ளவர்.
3.	கேசவேஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் கைலாச நாதர்கோவிலின் தெற்கில் உள்ளவர்.
4.	வன்மீகநாதர்	பெரிய காஞ்சீபுரம் கைலாசநாதர் கோவில் பின்புறம் உள்ள வயலில் உள்ளவர்.
5.	மஹாசலஸ்தேஸ்வரர்	மேற்கு ராஜவீதி வணிக வைசிய கல்யாண மண்டபத்தின் பக்கத்தில் உள்ளவர். தச்சுப்பட்டரை உள்ளே உள்ள சிவன்.
6.	சுக்லேஸ்வரர்	அரக்கோணம் செல்லும் பாதையில் வயலில் மரத்தடியின்கீழ் உள்ளவர்.
7.	மாதலீஸ்வரர்	பெரிய காஞ்சீபுரம் தர்கா பின்புறம் உள்ள தோட்டத்தில் உள்ளவர்.

8.	சிகண்டீஸ்வரர்	வையாவூர் போகும் வழியில் உள்ள மயானத்திற்கு பக்கத்தில் உள்ளவர்.
9.	சிவலிங்கம்	ரயில்வே ஸ்டேஷன் அருகில் உள்ள புளியந்தோப்பின் நடுவில் உள்ளவர்.
10.	சிவலிங்கம்	மாமல்லன் நகர் K.T.S, மணி தெரு கோடியில் உள்ள குளத்திற்கு அருகில் உள்ளவர்
11.	சோமேஸ்வரர் 3 சிவலிங்கங்கள்	மாமல்லன் நகரை அடுத்த ரயில்வே லைன் அருகில் வடக்கு பக்கம்உள்ளவர்.
12.	சிவலிங்கம்	சர்வ தீர்த்தக் கரை தென்புறம் உள்ள மண்டபத்தின் நடுவில் உள்ளவர்.
13.	சிவலிங்கம்	சர்வதீர்த்தம் கிழக்கு கரை அரச மரத்தடியின் கீழ் உள்ளவர்.
14.	சிவலிங்கம்	பெரிய காஞ்சீபுரம், ஓணகாந்தேஸ்வரர் கோவிலின் முன்புறம் உள்ள வயலில் உள்ளவர்.
15.	சிவலிங்கம்	தேனம்பாக்கம் பாலாற்றங் கரையின் மேல் உள்ளவர்.
16,	சிவலிங்கம்	பெரிய காஞ்சீபுரம் P.S.K. தெருவில் முனிசிபல் உயர்நிலைப் பள்ளி மதிற்சுவர். பக்கத்தில் உள்ளவர்.

பெருமாள் கோவில்கள்

1. ஸ்ரீ வரதராஜப் பெருமாள்	சின்ன காஞ்சீபுரம்
2. அஷ்டபுஜம் பெருமாள்	"
3. யதோத்காரி பெருமாள்	"
4. விளக்கொளி பெருமாள்	"
5. நரசிங்க பெருமாள்	
6. பச்சைவண்ணர்	பெரிய காஞ்சீபுரம்
7. பவழவண்ணர்	"
8. வைகுண்ட பெருமாள்	"
9. நிலாத்துண்டப் பெருமாள்	ஏகாம்பரநாதர் கோவிலினுள்









ஸ்ரீ சங்கர மடம்

ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ், 158, ஏரிக்கரைத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை